# ஆன்டேரியோ வணிகங்களுக்கான ஒழுங்குமுறை தேவைகள்

ஒரு வணிக உரிமையாளராக உங்கள் கடமைகள் மற்றும் ஆன்டேரியோவில் உள்ள பணியமர்த்துபவர்கள் மற்றும் பணியாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைப் புரிந்து கொள்ளுங்கள்.

## அனைத்து வணிகங்களுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள்

### *பணியமர்த்துதல் தரநிலைகள் சட்டம் (Employment Standards Act)*

குறைந்தபட்ச ஊதியம், வேலை நேர வரம்புகள், பணிக்கு அமர்த்துவதை நிறுத்துவது, வேலை-பாதுகாக்கப்பட்ட விடுப்புகள் மற்றும் பலவற்றைப் பற்றிய விதிகளை அறிக.

### *தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு சட்டம் (Occupational Health and Safety Act)*

பணியிடத்தில் உள்ள அனைவரின் உரிமைகள் மற்றும் கடமைகள் மற்றும் பணியிட அபாயங்களை எவ்வாறு கையாள்வது என்பதை அறிக.

### வரிகள் மற்றும் நன்மைகள்

நீங்கள் வரி ஒழுங்குவிதிகளுக்கு இணங்குவதை உறுதிசெய்து, வணிகங்களுக்கான ஆன்டேரியோ வரி கிரெடிட்கள் (Ontario tax credits for businesses) மற்றும் எம்ப்ளாயர் ஹெல்த் டாக்ஸ் (Employer Health Tax) (பணியமர்த்துபவரால் செலுத்தப்படும் ஒரு பேரோல் வரி) பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

### உடற்குறைபாடு உடையவர்களுக்கான அணுகல் சட்டங்கள்

ஆன்டேரியோவை எல்லோருக்கும் மிகவும் உள்ளடக்கியதாக மாற்ற சட்டங்களும் தரநிலைகளும் செயல்பாட்டில் உள்ளன. உங்கள் வணிகத்திற்கான அணுகல்தன்மை தேவைகள் மற்றும் தரநிலைகள் மற்றும் உடற்குறைபாடு உடையவர்களுக்கான அணுகல்தன்மை அறிக்கையை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பது பற்றி அறிக.

## சில வணிகங்களைப் பாதிக்கும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள்

### வணிகங்களுக்கான நுகர்வோர் பாதுகாப்பு தகவல்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களுக்கு இணங்குவது மற்றும் நுகர்வோர் புகார்களைத் தவிர்ப்பது எப்படி என்பதை அறிக.

### விவசாயம் மற்றும் உணவு சட்டங்கள்

வேளாண்-உணவு வணிகங்கள் உணவு பாதுகாப்பு மற்றும் வேளாண்மைச் சட்டங்களுக்கு இணங்க வேண்டும். இறைச்சி பதப்படுத்தும் ஆலைகள் கண்டிப்பாக ஒரு உரிமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் இறைச்சி பதப்படுத்துதல் தொடர்பான குறிப்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை பின்பற்ற வேண்டும்.

### சுற்றுச்சூழல் அனுமதிகள்

உங்களுக்கோ அல்லது உங்கள் வணிகத்திற்கோ தேவைப்படும் பல்வேறு வகையான சுற்றுச்சூழல் அனுமதிகள் மற்றும் ஒவ்வொன்றிற்கும் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்பது பற்றி அறிக.

### விலங்குகள் நலன்

வளாகத்தில் விலங்குகளைக் கொண்ட வணிகங்கள் கண்டிப்பாக *மாகாண விலங்குகள் நல சேவைகள் சட்டம் (Provincial Animal Welfare Services Act)* க்கு இணங்க வேண்டும்.

### வர்த்தக வாகனங்கள்

டிரக்குகள் அல்லது பேருந்துகள் போன்ற வணிக வாகனங்களை இயக்க உங்களுக்குத் தேவையானவற்றை எவ்வாறு பெறுவது என்பதை அறிக.

### ஆன்டேரியோவின் கட்டிடக் குறியீடு

ஆன்டேரியோவின் கட்டிடக் குறியீடு பற்றி மேலும் அறிக, இதன் மூலம் ஆன்டேரியோவில் தேவையான அனைத்து கட்டிட ஒழுங்குவிதிகளையும் உங்கள் வணிகம் பூர்த்தி செய்ய முடியும்.

### வடக்கில் வணிகம்

நீங்கள் வடக்கில் செயல்படுகிறீர்களா? கிடைக்கக்கூடிய வணிக ஆதரவு சேவைகள், மானியங்கள் மற்றும் கடன்களுக்கு நீங்கள் தகுதியுள்ளவரா என்பதை சரிபாருங்கள்.

**இந்த ஒழுங்குமுறை தேவைகள் பற்றி**

இங்கே மேலும் அறிக

**Ontario.ca/business**

Ontario